# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 85/2015**

திரு. த. பன்னீர்செல்வம்,
த/பெ தங்கராசு,
உடையார் தெரு,
கந்தர்வ கோட்டை,
புதுக்கோட்டை – மாவட்டம். --- மேல்முறையீட்டாளர்
(திரு. ப. சரவணமுத்து)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3074, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை – 622 001. --- எதிர்மனுதாரர்
(திரு.D. அசோக்குமார், செயற்பொறியாளர்/
புதுக்கோட்டை)

**கேட்புரை நாள் : 27–1–2016**

**ஆணை நாள் : 24–02–2016**

திரு. த. பன்னீர்செல்வம், த/பெ தங்கராசு, கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை அவர்களின் 17.10.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 85/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 27.1.2016 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

மேல்முறையீட்டாளர் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தாலுக்கா, கோவிலூர் கிராமத்தில் அவர் 99 வருடத்திற்கு குத்தகை ஒப்பந்தம் செய்துள்ள புல எண்.150/1A1A–ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள விண்ணப்பத்திற்கு விவசாய மின்இணைப்பு வழங்க உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம் :</u>**

2.1 மேல்முறையீட்டாளர் திரு. பன்னீர்செல்வம், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தாலுகா, கோவிலூர் கிராமம் புல எண்.150/1A1A–ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அந்த விண்ணப்பத்தின் பதிவு எண்.158, நாள் 15.7.96.

2.2 மேற்கண்ட நிலம், மேல்முறையீட்டாளரால் 1988–ஆம் ஆண்டு 99 வருட கால குத்தகைக்கு அரிமளம் வயி. இராமன் செட்டியார் மகன் திரு. சுப்பையா செட்டியார் அவர்களிடம் ஒப்பந்தம் போட்டுள்ள நிலமாகும்.

2.3 20.8.2010 நாளிட்ட அறிவிப்பின்படி சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெறுவதற்கு விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கு ரூ.500/– செலுத்துவதற்கு மேல்முறையீட்டாளர் முன்வந்தபோது, அவருக்கு கிணறு உரிமையில்லை என்பதால் மின்இணைப்பு வழங்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.4 29.10.2010 அன்று அதே விண்ணப்பத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய 90 நாள் அறிவிப்பு 2 லட்சம் மின்இணைப்பு வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு மின்இணைப்பு வழங்க முடியாது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.5 மேல்முறையீட்டாளர் இது சம்பந்தமான தன்னுடைய முறையீட்டை புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 17.8.2015 அன்று சமர்ப்பித்துள்ளார்.

2.6 மன்றம் தன்னுடைய 8.10.2015 நாளிட்ட ஆணையில் மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்துள்ளது. மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

**3. <u>மன்றத்தின் ஆணை :</u>**

3.1 புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 8.10.2015 நாளிட்ட ஆணையின் குறிப்பிட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"தீர்ப்புரை :*

*மனுதாரார் தரப்பு வாதம் மற்றும் வாரிய தரப்பு பதிலுரை ஆகியவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மேற்படி புகார் மனு மீது மன்றம் கீழ்க்கண்டவாறு முடிவெடுக்கிறது.*

*மனுதாரார் திரு. T. பன்னீர்செல்வம் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவோடு இணைத்துள்ள ஆவணங்கள் மனுதாரருக்கு நிலத்தின் மீதுள்ள உரிமையை விளம்புவதாக இல்லை. மேற்படி நிலத்திற்கு உரிமைதாரார் என்பதை உறுதிப்படுத்த சட்டப்பூர்வமான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதி 27(2)–க்கு உட்பட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்க இயலாத சூழ்நிலை உள்ளதால் மனுதாரரின் கோரிக்கை மனு இம்மன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுகிறது."*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>**

4.1 மேற்படி நிலம் அவருக்கு சொந்தமானது, அவரது சொந்த செலவில் கிணறு வெட்டியுள்ளார். வருவாய் ஆவணங்களான வாயிதா ரசீது, வில்லங்க சான்று, கிராம நிர்வாக அலுவலரின் சான்றுகளின் அடிப்படையிலும் 6.20 தாழ்வழுத்த மின் கட்டணம் IV–ன் படியும் விவசாய மின்இணைப்பு வேண்டி எழுத்துப்பூர்வமான பிரமாண பத்திரத்தை இத்துடன் இணைத்துள்ளார்.

4.2 மேற்படி நிலம் அடங்கியுள்ள கோவிலூர் பட்டா எண்.907–ல் உள்ள நிலங்களை 1988ம் ஆண்டு அப்போதைய சத்திரம் நிர்வாகத்தை கவனித்து வந்த திரு. இராமன் செட்டியார் மகன் திரு. சுப்பையா செட்டியார் அவர்கள் திருவோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் இறந்த பிறகு அவரது மனைவி திருமதி. சோலைச்சி அவர்கள் நிலங்களை விற்பனை செய்து பல்வேறு குடியிருப்புகள் உருவாகியுள்ளது என்பது உண்மை. அதன் ஆதாரமாக பல்வேறு வகையில் உட்பிரிவு செய்யப்பட்ட நிலங்களின் கணினி சிட்டாக்களை இத்துடன் இணைத்துள்ளார். மேலும், செயற்கைகோள் வரைபடத்தையும் இணைத்துள்ளார்.

4.3 மேற்படி நிலம் 1886ம் ஆண்டு ஆவண எண்.1205 சரத்துக்களின்படி திரு. பழனியப்ப செட்டியாருக்கு தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் திரு. ஜெ. பி. பெனிங்டன் துரை அவர்கள் எழுதிக்கொடுத்துள்ள வேலி–15, மா–14 குழி 60 நிலங்களை ஜமீனுக்குள்ள இருவார பாத்தியத்தில் குடிவாரபாத்தியத்தை மட்டும் எழுதிக்கொடுத்துள்ளார். அதாவது நிலங்களை குடிகளுக்குபிரித்துக்கொடுத்து மேல்பாரத்தை (வரி) குடிகளிடமிருந்து வசூலித்து மேற்படி எஸ்டேட்டிற்கு செலுத்தவேண்டிய தஸ்தாவேஜியை(வரி) சரிவர செலுத்தவேண்டும் என்பதன் அடிப்படையில் இந்த சாசனம் எழுதப்பட்டுள்ளது. அதன் நகலினை இணைத்துள்ளார். இதுவே மூலப்பத்திரமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

5.1 மனுதாரர் திரு. T. பன்னீர்செல்வம், தனது புகார் மனுவில் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா கோவிலூர் கிராமத்தில் தனக்கும் அரிமளம் வயி.இராமன் செட்டியார் குமாரர் சுப்பையா செட்டியாருக்கும் இடையில் ஏற்பட்ட 99 வருட குத்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ள புல எண்.150/1A1Aல் உள்ள கிணற்றுக்கு மின்இணைப்பு வழங்க உத்தரவிடக்கோரி மனுச் செய்திருந்தார். இது தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் நேரிடையாக கலந்துகொண்டு மேற்படி கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தினார்.

ஆனால், எழுத்துபூர்வமான பிரமாணப்பத்திரமோ புதிதாக ஆவணங்களையோ மன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

5.2 மனுதாரர் T. பன்னீர்செல்வம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுகா கோவிலூர் கிராமம் புல எண். 150/1A1Aல் உள்ள கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி அளித்த விண்ணப்பம் செயற்பொறியாளர்/இகா/புதுக்கோட்டை அலுவலகத்தில் பதிவு எண்.158 நாள் 15.7.96 அன்று பதிவு செய்யப்பட்டு உள்ளது. மேற்படி விண்ணபத்தின் அடிப்படையில் சுயநிதித் திட்டம் 10000/– திட்டத்தின் கீழ் மின்இணைப்பு வழங்க 20.8.2010 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டது. விண்ணப்பதாரர் முதல் கட்டமாக ரூபாய் 500/– செலுத்த முன்வந்தபோது வருவாய் ஆவணங்களை ஆய்வு செய்ததில் கணினி சிட்டாவில் விண்ணப்பதாரர் பெயர் இல்லாததால் பணம் பெறப்படவில்லை. அதன்பின்னர் அசல் விண்ணப்பம் மற்றும் வருவாய் ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேற்படி நிலம் 1988ம் ஆண்டு 99 வருட காலத்திற்கு திரு. சுப்பையா செட்டியார் என்பவரிடமிருந்து குத்தகைக்கு பெறப்பட்டுள்ளதும் அசல் விண்ணபத்தில் கிராம நிர்வாக அலுவலராலும் 99 வருட குத்தகை நிலம் என சான்று அளிக்கப்பட்டதும் தெரிய வந்ததால் மின்இணைப்பு வழங்க இயலாது என விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் மனுதாரருக்கு அதே விண்ணபத்திற்கு இரண்டு லட்சம் திட்டத்தில் மீண்டும் 29.10.2010–இல் 90 நாள் நோட்டீஸ் வழங்கப்பட்டது. விண்ணப்பதாரர் மின்இணைப்பு பெற முன்வந்தபோது ஆவணங்களின் அடிப்படையில் மின்இணைப்பு வழங்க இயலாது என மீண்டும் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டு விட்டது.

5.3 இதே கோரிக்கையை வலியுறுத்தி மனுதாரர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் அளித்த புகார் மனுவிற்கும் மேற்படி நிலம் விண்ணப்பதாரருக்கு சொந்தம் இல்லாத காரணத்தால் மின்இணைப்பு வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.4 மேலும் குத்தகை பத்திரத்தை ஆய்வு செய்ததில் சுப்பையா செட்டியார் என்ற தனிப்பட்ட நபரால் பன்னீர் செல்வத்திற்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது பெறப்பட்டுள்ள கனினி சிட்டாவில் உரிமையாளர் பெயரில் அரிமளம் வயிரவன் செட்டியார் அன்னதான தற்கால டிரஸ்டிகள் என உள்ளது. டிரஸ்டிகள் பெயரில் சுப்பையா செட்டியார் பெயர் இடம் பெறவில்லை. மேலும், குத்தகை பத்திரத்திற்கான மூலபத்திரமும் இணைக்கப்படவில்லை. குத்தகை ஆவண பத்திரத்தில் 99 வருடத்திற்கு பிறகு குத்தகை காலாவதி ஆகிவிடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறைஆணைய விதி 27(2)ன் படி விவசாய மின்இணைப்பு வேண்டிய விண்ணபத்தில் மனுதாரர் பேரில் நில உரிமைக்கான சான்றுகள் இல்லாத காரணத்தால் மின்இணைப்பு வழங்க இயலாது என்றும் வலியுறுத்தப்பட்டது.

5.5 மனுதாரருக்கு சொந்தமானதாக கூறப்பட்டுள்ள இடத்திற்கு உரிய வருவாய் ஆவணங்களை கனிணி சிட்டாவில் உரிமையாளர்களின் பெயரில் மனுதாரரின் பெயர் இடம் பெறவில்லை.

5.6 குத்தகை பத்திரம் மனுதாரருக்கு சுப்பையா செட்டியார் என்ற தனிப்பட்ட நபரால் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. கணினி சிட்டாவில் உரிமையாளர் பெயரில் அரிமளம் வயிரவன் செட்டியார் அன்னதான டிரஸ்டிகள் மற்றும் பலரின் பெயர் கூட்டாக உள்ளது. ஆனால், மனுதாரரின் பெயர் இல்லை.

5.7 மூலப்பத்திரத்தில் உள்ள பழனியப்பன் செட்டியாருக்கும் வயிரவன் செட்டியாருக்கும் உள்ள முறைகள் விளக்கப்படவில்லை. அதற்கு போதிய சான்றுகள் இணைக்கப்படவில்லை.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 27.1.2016, அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் சார்பில் மேல்முறையீட்டாளரின் மகன் திரு. ப. சரவணமுத்து, அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. D. அசோக்குமார், செயற்பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. ப. சரவணமுத்து அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 திரு. ப. சரவணமுத்து அவர்கள் மேல்முறையீட்டாளர் 99 வருட காலத்திற்கு குத்தகை ஒப்பந்தம் உள்ள நிலத்தில் சொந்த செலவில் கிணறு வெட்டி அந்த கிணற்றிற்கு தான் விவசாய மின்சார இணைப்பு கேட்பதால் மேல்முறையீட்டாளருக்கு மின்இணைப்பு தரவேண்டும் என்று வாதிட்டார்.

7.3 பதிவு அலுவலக ஆவணங்களின்படி அவரின் குத்தகை ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவர் சட்டப்படி அந்த நிலத்தில் விவசாயம் செய்து வருகின்றவர் ஆவர் என்றும் பதிவு அலுவலக வில்லங்க சான்றின்படி அந்த நிலத்தின் குத்தகை பாத்தியம் தன்னிடம் உள்ளது என்றும் வாதுரை புரிந்தார்.

7.4 இதுபோன்ற பத்திரம் உள்ளவர்களுக்கு மின்வாரியம் ஏற்கனவே விவசாய மின்இணைப்பு வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

7.5 அவர் விவசாயத்தை நம்பிதான் உள்ளதால் மின்இணைப்பை மறுப்பது அவரின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்றும் வாதிட்டார்.

7.6 ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்சார கட்டணத்தை நிர்ணயிக்கும் SMT ஆணை எண்.9/2014 நாள் 11.12.2014 ன் பத்தி 6.20(iv) ஐ சுட்டிக்காட்டி மின்பயன்பாடு வேளாண்மை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக இருக்குமானால் நிலத்தின் உடமையை பொருட்படுத்தாமல் மின்கட்டணம், பொருந்தும் என்பதால் விவசாய மின்இணைப்பை

உடமைதாரர் அல்லாத குத்தகைதாரருக்கும் வழங்கலாம் என்றும் தன்னுடைய குத்தகை ஒப்பந்தம் பதிவு பெற்ற ஒப்பந்தம் என்பதால் ஆணையம் ஒப்பந்ததாரருக்கும் மின்இணைப்பு வழங்க உத்தரவு இட்டுள்ளது என்பதால் தனக்கும் மின்இணைப்பு தரவேண்டும் என்றும் வாதுரை புரிந்தார்.

7.7 மேலும், 27.1.2016 அன்று கேட்புரை நாளில் சமர்ப்பித்த தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

(i) குத்தகை நிலமாக இருப்பதால் அவரது பெயர் கணினி சிட்டாவில் இடம் பெறவில்லை. கிராம நிர்வாக அலுவலரின் சான்றுகளின்படி அவர் விவசாயம் செய்துவருவதும் அந்த நிலம் அவரது அனுபவத்தில் உள்ளது என்பதும் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) குத்தகை பத்திரம் அவருக்கு தனிப்பட்ட நபரால் எழுதிக்கொடுக்கப்படவில்லை அவர், கந்தர்வகோட்டை அரிமளம் வைரவன்செட்டியார் சத்திரம் டிரஸ்டிகள் என்ற முறையில் நான்காவது டிரஸ்டியாக இருந்து எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த டிரஸ்டிகளின் விவரங்கள் அவரது தகப்பனார் திரு. தங்கராஜ் உடையார் அவர்களுக்கு கிரையசாசனம் எண்–173/11–2–1971–ல் திருவோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி அன்னதான டிரஸ்டிகள் நான்குபேர்களும் சார் பதிவாளர் முன்னிலையில் பதிவு செய்து உள்ளார்கள். அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திரு. சுப்பையா செட்டியார் என்ற தனிப்பட்ட நபர் அல்ல சத்திர நிர்வாகிகளுள் நான்காவது நபராக உள்ளார் என்பது தெளிவாகிறது என்பதனை தெரிவித்து கொண்டுள்ளார்.

(iii) மூலப்பத்திரத்தில் உள்ள பழனியப்பன் செட்டியார் அவர்களின் குடும்ப பரம்பரை நிர்வாகிகளின் விவரங்கள் 1971ம் ஆண்டு திருவோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் தெளிவாக உள்ளது அதன் விவரங்கள் 1) ராம. மு. பழ. முத்தையா செட்டியார் மகன் வைரவன் செட்டியார், 2) ரா.மு.பழ. முத்தையாசெட்டியார் மகன்சொக்கலிங்கம் செட்டியார், 3) ரா.மு. பழ. மு. வள்ளியப்பசெட்டியார் மகன் ராமநாதன் செட்டியார், 4) ரா.மு.பழ. மு. வயி.ராமன் செட்டியார் மகன் சுப்பையாசெட்டியார் என நான்கு நபர்களாலும் ஆவணங்கள் பதிவு

செய்யப்பட்டுள்ளது. அதன்படி பழனியப்ப செட்டியார், முத்தையாசெட்டியார் – வைரவன் செட்டியார் – ராமன்செட்டியார்– சுப்பையாசெட்டியார்–அவரது மனைவி சோலைச்சி தற்சமயம் கணினி சிட்டாவில் சுப்பையா செட்டியார் மனைவி சோலைச்சி என இடம் பெற்றுள்ளது. இதற்கு 1971–ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் உள்ளன. மேலும், கிராம நிர்வாக அலுவலரின் சான்றுகளின் படியும் அவரது பெயருக்கு மின்இணைப்பு வழங்கலாம் என தெரிவித்துள்ளார்கள்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரரின் சார்பில் திரு. D. அசோக்குமார், செயற்பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 செயற்பொறியாளர்/புதுக்கோட்டை அவர்கள் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி27(2)ன்படி கிணற்றின் உரிமையாளருக்குத்தான் விவசாய மின்இணைப்பு வழங்க முடியும், எனவே, குத்தகைதாரருக்கு மின்இணைப்பு வழங்க விதிகளில் வழியில்லை என்று வாதிட்டுள்ளார்.

8.3 மேலும், இந்த மேல்முறையீட்டாளர் குத்தகை ஒப்பந்தத்தை அரிமளம் வயி. இராமன் செட்டியார் குமாரர் திரு. சுப்பையா செட்டியார் அவர்களுடன் செய்து கொண்டுள்ளார். ஆனால், மேற்கண்ட சர்வே எண்.150/3A (பழைய எண்.150/1A1A) 7 நபர்களின் பெயரில் கூட்டுப் பட்டவாக பட்டா எண்.907ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, குத்தகை ஒப்பந்தம் சொத்துக்கு உரிமை உடையவர்கள் அனைவராலும் செய்யப்படவில்லை. பட்டா எண்.907ல் உள்ள உரிமையாளர்கள் பெயரில் திரு. சுப்பையா செட்டியார் பெயர் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

8.4 மேலும், இதுபோன்ற குத்தகை ஒப்பந்தம் உள்ளவர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்றும் அவ்வாறு வழங்கப்பட்டு இருந்தால் அது தவறாகும் என்றும் வாதிட்டார்.

8.5 மேலும், மூலப்பத்திரத்தில் மேற்கண்ட சொத்தின் குடிவார பாத்தியம் பழனியப்பன் செட்டியாருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், குத்தகை ஒப்பந்தம் திரு. சுப்பையா செட்டியாரால் போடப்பட்டுள்ளது. திரு . பழனியப்பன் செட்டியாரின் உரிமை திரு. சுப்பையா செட்டியாருக்கும் எவ்வாறு வந்தது என்பது விளக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

8.6 ஒழுங்குமுறை ஆணையத்தின் SMT ஆணை எண்.9/2014, நாள் 11.12.2015ன் படி 6.20(iv) பராவில் இந்த மின்கட்டணம் மின்பயன்பாடு வேளாண்மை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக இருக்குமானால் நிலத்தின் உடமையை பொருட்படுத்தாமலே பொருந்தும் என்பது மின்கட்டணம் விதிப்பதற்கு உள்ள ஆணை ஆகும். எனவே, மின்கட்டணம் விதிப்பதற்குதான் மேற்படி ஆணை பொருந்தும். ஆனால், மின்இணைப்பு வழங்குவது மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதிகளின்படி தான் என்பதால் குத்தகைதாரருக்கு மின்இணைப்பு வழங்க முடியாது என்றும் வாதிட்டார்.

9. <u>மேல்முறையீட்டாளரின் எழுத்துப்பூர்வமான வாதுரை</u>

9.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய 29.1.2016 நாளிட்ட எழுத்துப்பூர்வமான வாதுரையில் கீழ்கண்ட வாதத்தை தெரிவித்துள்ளார்.

9.2 மேலும், 12.5.2014 Draft amendment –ன் படி Form–2 application form for agriculture service connection Refer Regulation 27(2)–ன் படியும் இதில் வரிசை எண். 6ல் Proof for ownership of land / well anyone of the following to be enclsoed என்பதில் (e)–ல் attested copy of lease deed with the consent of the owner of land என உள்ளது அதன்படி ஐந்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் அவருக்கு விவசாய மின்இணைப்பு வழங்க உத்திரவிடக்கோரி மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறார்.

10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 இருதரப்பினராலும், எடுத்துரைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய மின்இணைப்பை வழங்குவதற்கு உள்ள விதி முறைகள் என்ன ?

(ii) மேல்முறையீட்டாளரின் வாதமான பயன்பாடு வேளாண்மை சம்பந்தப்பட்டது என்றால், உரிமையைப்பற்றி பொருட்படுத்தாமல், விவசாய மின் இணைப்பை வழங்க, ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்சார கட்டணத்தை நிர்ணயிக்கும் ஆணையின்படி விதி உள்ளது என்பதால் குத்தகைதாரருக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

(iii) மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணபத்திற்கு மின்இணைப்பு வழங்க முடியுமா ?

## 11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>

**11.1** ஒரு புதிய விவசாய மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றால் பின்பற்றப்பட வேண்டிய விதி என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(2) ஐ ஆரரய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 27 **R<u>equisitions for Supply of Energy :</u>***

*xxx xxx xxx*

*(2) Supply to Agricultural category: Application for supply to agriculture category shall be in Form 2 of Annexure III. In respect of the agricultural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stipulated in sub section 4 under section 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act.”*

**11.2** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது வேளாண்மை வகையின மின் வழங்கலுக்கு பின்னிணைப்பு – III இல் உள்ள படிவம் 2 இல் நுகர்வோர் விண்ணபத்தை தரவேண்டும். வேளாண்மை வகையினத்தை பொருத்த வரையில் (சட்டத்தின் 86 ஆம் சட்ட பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4) இன்படி) இப்பொருள் தொடர்பாக தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 இன் பிரிவிலுள்ள துணைப் பிரிவு (1) இன்படி மாநில அரசு பொது நலங் கருதி வெளியிடும் கொள்கை வெளிகாட்டுதலையும் அடிப்படையாக கொண்டு, ஒழுங்குமுறை ஆணையம் விதிக்கும் ஆணையின்படியும் இருக்க வேண்டும்.

11.3 இங்கே, விண்ணப்ப படிவம், பின்னிணைப்பு III இல் உள்ள படிவம் IIன் படி இருக்க வேண்டும் என்று மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27 (2) இல் கூறியுள்ளதால் அந்த படிவம், கீழே தரப்பட்டுள்ளது.

*FORM-2*

*Application Form for Agriculture Service connection [refer clause 27(2)]*

*APPLICATION FOR SUPPLY OF POWER TO AGRICULTURAL PUMP SETS*

*(Note: The application should be signed by the owner of the well, if there are partners, all must sign or consent to be given by co- owners)*

*To*

*The Designated Engineer,*
*(Address of the Licensee's Distribution Centre)*

1. *Name of owner of the well or partners*
2. *Full residential address of the owner or partners*
3. *S.F. No. in which the well is situated*
4. *Revenue village name, Taluk and District*
5. *Area and type of land to be irrigated by this well (Wet / Dry)*
6. *Horse Power of motor pump sets proposed to be installed.*
7. *Type of pump set (Centrifugal/ Submersible/ Air compressor)*
8. *Consent to abide by R&C of Licensee with regard to duration of supply*

*It is certified, I am the sole owner of the well / this application is signed by all partners*

*Place :*

*Date :*

*Signature of Applicant/ Partners*

*Note : The document such as FMB map showing the location of the well, patta, chitta, adangal etc., shall be enclosed with the application.*

*Date of receipt in the*
*Office of the Engineer,*

---

*Certified that the open well/bore well and lands measuring……………………………….acres and……………..cents in S.F.No………………….Village……………………………………of………………………………Taluk is Exclusively owned Thiru…………………………………………………………………s/o……………………………………………of ……………………………..Village.*
*Jointly owned by*

*List of owners (1)……………………………………..s/o……………………..*

*(2) ……………………………………..s/o……………………..*

*(3) ……………………………………..s/o……………………..*

*Certified that Thiru ……………………………………..s/o……………………..*
*is small / big farmer(s)*

*Village Administrative Officer.*

**11.4** மேற்கண்ட படிவத்தை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது குறிப்பு (Note) என்ற தலைப்பின் கீழ், விண்ணப்பத்தில் கிணற்றின் உரிமையாளர் கையொப்பமிட வேண்டும் என்றும் பங்குதாரர்கள் இருந்தால் அனைவரும் கையொப்பமிட வேண்டும் அல்லது அவர்களின் கையொப்பமிட்ட சம்மத கடிதத்தை இணைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிணற்றிற்கு விண்ணப்பதாரர் மட்டும் உரிமையாளர்/கிணற்றின் உரிமைதாரர்கள் அனைவரும் கையொப்பம் இட்டுள்ளனர் என்றும் விண்ணப்பதாரர் சான்று அளிக்க வேண்டும். மேலும், விண்ணப்பத்தில் கிராம நிர்வாக அலுவலரால், மேற்கண்ட கிணறும் அது அமைந்த இடத்தின் உரிமையாளர்களின் பட்டியல் சான்று அளிக்கப்பட வேண்டும் என்றும் அறிய முடிகிறது. எனவே, விண்ணப்ப படிவத்தின்படி கிணற்றின் உரிமையாளர்தான் ஒரு விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பம் சமர்பிக்க முடியும் என்பது மின்சார பகிர்மான விதி 27(2)ன்படி என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>**

**12.1** மேல்முறையீட்டாளர் ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்கட்டணத்தை நிர்ணயிக்கும் SMT ஆணை எண் 9/2014 ன் பத்தி 6.20 (IV)ன்படி பயன்பாடு வேளாண்மை சம்பந்தப்பட்டது என்றால், உரிமையை பற்றி பொருட்படுத்தாமல், மின் கட்டணம், வேளாண்மை பயன் பாட்டுக்கு உள்ள Tariff IV ல் வசூலிக்கலாம் என்பதை சுட்டிக்காட்டி, ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணையின்படி எந்த வகைக்கு மின்சாரம் பயன் படுத்தப்படுகிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். உபயோகிப்பவர் உரிமையாளர்தான் என்று இருக்க வேண்டியதில்லை என்பதால்

மின் இணைப்பை 99 ஆண்டுகள் குத்தகை ஒப்பந்தம் செய்துள்ள தனக்கு விவசாய மின் இணைப்பை வழங்கலாம் என்று வாதிட்டுள்ளார்.

12.2 எதிர்மனுதாரர், மேற்கண்ட ஆணையத்தின் உத்தரவு, Tariff order என்பதால் மின்கட்டணம் விதிப்பிற்கு தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதில் உபயோகிப்பவர், மின் இணைப்பின் குத்தகைதாரராக இருக்கலாம் உரிமையாளராக இருக்க வேண்டியது இல்லை. ஆனால் மின் இணைப்பு வழங்க, மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(2) ஐத்தான் பின்பற்ற வேண்டும் என்று வாதுகை புரிந்தார்.

12.3 இங்கு மேல்முறையீட்டாளர் tariff order SMT 9 of 2014 dt 12.12.14 பத்தி 6.20 (IV)ஐ குறிப்பிட்டு வாதுரை புரிந்துள்ளதால் மேற்கண்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***<u>“6.20 Low Tension Tariff IV:</u>***

*xxx xxx xxx*

*xxx xxx xxx*

*(iv) This tariff is applicable irrespective of owner ship of land if the usage of electricity is for agriculture and its allied activities.”*

12.4 மேற்கண்ட பத்தி 6.20 (iv) ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு இணைப்பில் மின்பயன்பாடு வேளாண்மை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக இருக்குமானால் நிலத்தின் உடமையைப் பொருட்படுத்தாமலே, மின்கட்டணம், வேளாண்மைக்குறிய Tariff என்ற விகிதத்தில் வசூல் செய்யலாம் என்று அறிய முடிகிறது.

12.5 Tariff (iv) என்ற விகிதத்தில் வசூல் செய்ய, அந்த மின் இணைப்பை பயன்படுத்தி வேளாண்மை அல்லது அது சார்ந்த நடவடிக்கையை மேற்கொண்டால் போதும். அந்த நடவடிக்கை மின் இணைப்பின் உரிமையாளர்தான் செய்யப்பட வேண்டும் என்பது இல்லை. அதாவது மின் இணைப்பை பெற்றவர் அல்லது மின் இணைப்பு பெற்றவரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ஒருவரால் வேளாண்மை அல்லது அதுசார்ந்த நடவடிக்கையை மேற்கொண்டால் மின்கட்டணம் Tariff IV ல் வசூலிக்கப்படும் என்பது ஆகும்.

12.6 எனவே, எதிர்மனுதாரரின் வாதமான, மேற்கண்ட Tariff order SMT 9 of 2014 ல் உள்ள பத்தி 6.20 (iv) மின் கட்டணம் விதிப்பதற்கு மட்டுமே பொருந்தும் என்ற வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

12.7 மேலும், வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி மின்இணைப்பு பெறுவதற்கு கிணற்றின் உரிமையாளர் தான் விண்ணப்பிக்கமுடியும் என்பதாலும் குத்தகைதாரருக்கு விவசாய மின்இணைப்பு வழங்க வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

13. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>

13.1 இந்த மேல்முறையீட்டாளர், சர்வே எண் 150/A/1A ல் உள்ள கிணறு உள்ள நிலம் தனக்கு 99 வருடம் குத்தகை தரப்பட்ட நிலம் என்பதால், தன்னுடைய மின் இணைப்பு கோரும் விவசாய விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு தர வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

13.2 மேலும், மேற்கண்ட கிணற்றை வெட்டியது அவர்தான் என்பதாலும், அவர்தான் கிணற்றின், உரிமையாளர் என்று வாதிட்டுள்ளார். மேலும் அவர் விவசாயத்தை நம்பிதான் உள்ளதால், இணைப்பு தர மறுப்பது அவரின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்றும் வாதுரை புரிந்துள்ளார். 99 வருடம் குத்தகை என்பது பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் என்பதால் சட்டப்படி அவர் குத்தகைதாரர் என்பதால் தனக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

13.3 மேலும், இது போன்ற குத்தகைதாரர்களுக்கு விவசாய மின் இணைப்பு புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தில் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

13.4 மேலும், 12.5.2014ன் ஒழுங்குமுறை ஆணையத்தால் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள மின்சார வரைவு பகிர்மான விதித்தொகுப்பின் வரைவு திருத்தத்தில் வெளியிடப்பட்டுள்ள மின்சார விண்ணப்பப் படிவத்தின் 6வது column-த்தின் படி

விண்ணப்பதாரர் நிலத்தின்/கிணற்றின் உரிமையாளர் என்பதற்கு ஆதாரமாக கீழ்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதில் (e) என்ற விபரம் சான்று அளிக்கப்பட்ட குத்தகைப்பத்திரம் மற்றும் உரிமையாளரின் சம்மதக்கடிதத்துடன் என்று தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டி அதில் குத்தகைப்பத்திரம் உள்ளது என்பதால் அவருக்கு விவசாய மின்இணைப்பை வழங்க உத்திரவிட வேண்டும் என்று கூறியுள்ளார்.

13.5 எதிர்மனுதாரர், மின்வழங்கல் விதித் தொகுப்பு 27(2) ன்படி, கிணறு உள்ள நிலத்தின் உரிமையாளருக்குதான் விவசாய மின் இணைப்பு வழங்க முடியும். மேல்முறையீட்டாளர், உரிமையாளர் அல்ல என்பதால், அவருக்கு மின் இணைப்பு வழங்க விதிகளில் வழியில்லை என்று வாதிட்டுள்ளார். மேலும், குத்தகைதாரருக்கு விவசாய மின்இணைப்பு ஏற்கனவே வழங்கி இருக்க முடியாது. அவ்வாறு வழங்கப்பட்டு இருந்தால் அது தவறு என்றும் வாதிட்டுள்ளார்.

13.6 மேலும், மேற்கண்ட நிலத்தின் உரிமையாளர்கள் என்று பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களால் குத்தகை ஒப்பந்தம் போடப்பட வில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

13.7 மேல்முறையீட்டாளர் குத்தகைப்பத்திரமும் ஆணையத்தின் ஆணையின்படி ஏற்புடையது என்று சுட்டிக்காட்டியுள்ள ஆவணம் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் வரைவு திருத்த முன்மொழிதல் (proposed draft amendment) ஆகும். அந்த வரைவு திருத்தம் ஒழுங்குமுறை ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணையாக அரசு இதழில் (Govt Gazette) வெளியிடப்பட்ட பின்புதான் அது அமலுக்கு வரும். மேற்கண்ட வரைவு திருத்தம் இன்றுவரை ஒழுங்குமுறை ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணையாக வெளியிடப்படவில்லை. எனவே, அது அமலில் உள்ள ஆணையல்ல என்று தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, அந்த வரைவு திருத்தத்திலுள்ள விபரங்களை இந்த வழக்கின் தீர்வுக்கு எடுத்துக் கொள்ள முடியாது. எனவே, ஏற்கனவே உள்ள விண்ணப்ப படிவம்தான் உபயோகத்திலிருக்கும். ஏற்கனவே உள்ள விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணம் பத்தி 11.3–ல் கொடுக்கப்பட்டுள்ளது. அவை கிணற்றிற்கான புல அளவை நிலப்படம் (FMP map), பட்டா, சிட்டா, அடங்கல் என்று

கூறப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் தான் தற்பொழுது உள்ள விதிமுறையின்படி ஏற்றுக் கொள்ளபடும் ஆவணங்கள் என்பதால் மேல்முறையீட்டாளரின் மேற்கண்ட வாதமான குத்தகை பத்திரமும் ஆணையத்தின் ஆணைப்படி ஏற்புடையது என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

13.8 மேலும், இது சம்பந்தமாக, திரு பன்னீர்செல்வம் அவர்கள் சமர்பித்துள்ள விண்ணப்பத்தினை ஆராய விரும்புகிறேன் மேற்கண்ட விண்ணப்பத்தில் கிராம நிர்வாக அலுவலரின் சான்று உள்ளது. அது விண்ணப்பத்திலுள்ளவாறு கீழே தரப்பட்டுள்ளது.

*"<u>கிராம நிர்வாக அலுவலரின் சான்று</u>*

*கிணறு உள்ள தாய்க்கிராமம் 15, கோவிலூர்*

*கிணறு உள்ள நில அளவை எண். சர்வே எண்.150/*

*கிணற்றுக்குப் பாத்தியப்பட்டவர்கள்*

*1. தங்கராசு மகன் பன்னீர்செல்வம்*

*2. ஷையார் புல எண்ணையுள்ள புஞ்சையை 99 ஆண்டுகளுக்கு குத்தகை மூலம் அனுபவம் (ஆவண எண்.1194 dt.7.4.1988 படி)*

*பாத்தியப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1 பேர்*

*மேலே குறிப்பிட்டுள்ளவரைத் தவிர வேறு யாரும் இந்த கிணற்றில் பாத்தியதை கிடையாது. கிணற்றில் மின்சாரம் வைப்பதற்கு போதுமான தண்ணீர் இருக்கிறது.*

*(ஒப்பம்/ x x xx)*

*கிராம நிர்வாக அலுவலரின் கையொப்பம் "*

13.9 மேற்கண்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்றினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, கிணறு உள்ள நில அளவை எண் 150/ தங்கராசு மகன் பன்னீர் செல்வம் அவர்களுக்கு ஆவண எண் 1194 dt 17/4/1998 ன்படி மேற்படி புல எண்ணிலுள்ள புஞ்சையை 99 ஆண்டுக்கு குத்தகை மூலம் அனுபவம் என்று தெரிகிறது. சான்றிதழில் கிராம நிர்வாக அலுவலர், சர்வே எண்.150/ என்றுதான் கூறியுள்ளார். ஆனால், ஆவண எண்.1194 dt.7.4.1988ன் படி சர்வே எண். 150–1A1A மற்றும் சர்வே எண்.150–1A1c2A ஆகியவை குத்தகையில் அடங்கும். ஆனால்,

மின்சார விண்ணப்பம் சர்வே எண்.150/1A1A என்று செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கிணறு உள்ள நிலம் மேல்முறையீட்டாளருக்கு குத்தகை என்று தெரிகிறது. மேலும், மேல்முறையீட்டாளரும் தான் குத்தகைதாரர் என்று தான் வாதிட்டுள்ளார்.

13.10 என்னுடைய முதல் வழக்கெழு வினாவிற்கான தீர்வின்படி ஒரு விவசாய மின்இணைப்பு பெறுவதற்கு ஒரு கிணற்றின் உரிமையாளர்தான் தகுதியானவர் என்று தீர்வு செய்யப்பட்டு உள்ளதால் மேல்முறையீட்டாளர், மேற்கண்ட நிலத்தின் குத்தகைதாரர் என்பதால் அவருடைய விண்ணப்பத்திற்கு விவசாய மின்இணைப்பு வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 14. <u>முடிவுரை</u>

14.1 வழக்கெழு வினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்றுக்கான தீர்வின் படி, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையாக அவருக்கு 99 வருடம் குத்தகை ஒப்பந்தம் செய்துள்ள புல எண் 150/1A1/A-ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

14.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 85/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. த. பன்னீர்செல்வம்,
த/பெ தங்கராசு,
உடையார் தெரு,
கந்தர்வ கோட்டை,
புதுக்கோட்டை – மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3074, கிழக்கு மெயின் ரோடு,
புதுக்கோட்டை – 622 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
புதுக்கோட்டை மின் பகிர்மானவட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3074, கிழக்கு மெயின் ரோடு, புதுக்கோட்டை – 622 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.